எதிரொலி
12.7.2009

## போரூர் இராமச்சந்திரா பல்கலையில்

# குரல் வளம் காக்கும் பயிலரங்கம்

சென்னை, ஜூலை 12-

குரல் வளத்தை காக்கவும், குரல் வளையில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கும் மருத்துவம் குறித்த இரண்டு நாள் தேசிய கருத்தரங்கம் சென்னை, போரூர், ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலைக் கழகத்தில் துவங்கியது.

நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசிய, பிரபல கர்நாடக இசை பாடகர் சுதா ரகுநாதன், நாம் குரலின் மகத்துவத்தை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் என்றும் நம் குரலை பலவகைகளில் பயன்படுத்த முடியும். ஆகவே குரல்வளை பற்றியும் அதன் தொடர்புடைய தசைகள் மற்ற உறுப்புகளை நாம் எப்படி பயன்படுத்த வேண்டும், காப்பாற்ற வேண்டும் என்றும் அறிந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்.

இப்பயிலரங்கத்தில் நேரடியாக அறுவை சிகிச்சைகளும், பயிற்சி அறுவை சிகிச்சைகளும் செய்து காட்டப்படும். நாடெங்கிலுமிருந்து பல காது, மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சை நிபுணர்களும், குரல்வள பயிற்சி நிபுணர்களும் கலந்து கொள்கிறார்கள் என்று பல்கலையின் காது, மூக்கு, தொண்டை மற்றும் கழுத்துசார் அறுவை சிகிச்சைத் துறை தலைவர் டாக்டர்.ஏ.ரவிகுமார் கூறினார்.

பல்கலையின் காது, மூக்கு, தொண்டை மற்றும் கழுத்துசார் அறுவை சிகிச்சை துறையும், பேச்சு, மொழி மற்றும் கேட்பியியல் துறையும் இணைந்து இந்த பயிலரங்கை ஏற்பாடு செய்துள்ளன. குரல்வளம், மற்றும் குரல்வளை சம்பந்தப்பட்ட குறைகளை சரி செய்வது பற்றி குரல்வள நிபுணர்கள் விவாதிப்பார்கள்.

உலகில் ஏழு சதவிகித மக்கள் குரல்சார் குறைகளால் அவதிபடுகிறார்கள். ஸ்ரீஇராமச்சந்திரா பல்கலையில் 2006-2008-ல் மேற்கொண்ட ஒரு கணிப்பின் படி குரல்சார் தொழில் செய்யும் சுமார் 46 சதவிகிதம் பேருக்கு குரல்சார் பிரச்சனைகள் கண்டுபிடிக்கப்பட்டது.

கலைஞர் களுக்கு போரூர் ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலைக் கழகத்தின் குரல் வள சிகிச்சை நிலையத்தில் குரல் பாதுகாப்பு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. குரல் வளம் காக்கும் பயிற்சிக் கல்வி ஒன்றையும் இப்பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்துகிறது.